2006 ஆகஸ்ட் 23]

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே தரப்படுகிற ஒத்திவைப்புத் தீர்மானமாக இருந்தாலும், கவன ஈர்ப்புத் தீர்மானமாக இருந்தாலும். அதை எடுத்துக்கொள்ள வேண்டிய அளவுக்கு அவைத் தலைவர் அனுமதித்தாலும்கூட, ஒரு கட்சியிலே ஒருவர் ஒரு தீர்மானத்தைக் கொடுத்து அதைப்பற்றிப் பேசிவிட்டால், மறுபடியும் அந்தக் கட்சியிலே உள்ளவர்கள், வேறு தீர்மானத்திற்கு அன்றைக்கே வலியுறுத்துவது வழக்கமில்லை. ஒரு தீர்மானம்தான், ஒரு கட்சியின் சார்பாக ஒரு நாளிலே எடுக்கப்பட முடியும். வேறு கட்சியாக இருந்தால், அவர்கள் குறையிருக்குமானால் தெரிவிக்கலாம். ஆனால், ஒரு தீர்மானம் எடுத்ததற்குப் பின்னர், மேலும், மேலும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள், அவரவரும் கையிலே ஒரு தீர்மானத்தை வைத்துக்கொண்டு, அதை எடுக்க வேண்டுமென்று கேட்பது, அவையினுடைய மரபல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், அவை முன்னவர் பதில் சொல்லிவிட்டார்கள், அதற்குப் பிறகு என்ன இருக்கிறது?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: ஒரு தீர்மானத்திற்கு ஒரு கட்சிக்கு என்று அனுமதிக்கிறீர்கள்; அதற்கு நான் சொல்ல வரவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்தவுடனேயே, நாங்கள் முதலிலே எதிர்ப்பதற்காக எழுந்தோம். ஆனால், அந்த வாய்ப்பை நீங்கள் அளிக்காமலேயே அடுத்த நிமிடமாக நீங்கள் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். அதுதான் எங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அந்த வாய்ப்பை அளிக்க வேண்டும் எங்களுக்கு. அதுதான் கேட்டுக்கொள்கிறோம். அறிமுக நிலையிலேயே அதை எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய எதிர்ப்பு, பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சரி, எதிர்ப்பைச் சொல்லிவிடுங்கள். சொல்லுங்கள்.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆரம்ப நிலையிலேயே இதை நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பதிவு செய்யப்பட்டது. அவ்வளவுதானே? (குறுக்கீடுகள்)

5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 27 – தொழில் துறை
(ஆ) கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை

(அ) கோரிக்கை எண் 27 – தொழில் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27– தொழில் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.85,13,38,000/–, மூலதனக் கணக்கில் ரூ.39,47,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.68,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1601, திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “வால்பாறை தொகுதி தென்சங்கம்பாளையத்தில், கொப்பரைத் தேங்காய்மூலம் எண்ணெய் எடுத்தல், தேங்காய்ப் பூ தயாரித்தல் போன்ற தேங்காய்மூலம் கிடைக்கும் பலன்களைக் கொண்ட தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: